செ.வெ.எண்: 726/2016 நாள்: 17.10.2016

## செய்தி

## இராணுவ விளையாட்டு கம்பெனி(பள்ளி)யில் விளையாட்டில் திறன் பெற்ற சிறார்கள் தேர்வு

இந்திய இராணுவ (தரைப்படை)விளையாட்டு நிறுவனத்தின் கீழ் இயங்கும் சிறார் விளையாட்டு கம்பெனி(பள்ளி)யில் மாணவர்கள் (விளையாட்டு வீரர்கள்) தேர்வு 21.11.2016 முதல் 25.11.2016 வரை காலை 07.00 மணிக்கு புனேயில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள் மாநிலங்களுக்கிடையிலான ஜூனியர், சப் ஜீனியர் பிரிவில் குத்துச்சண்டை, பளுதூக்குதல், மல்யுத்தம், வாள்சண்டை, வில் வித்தை, தடகளம், நீரில் முழுகுபவர் (Diving) போன்ற பிரிவுகளில் முதல் அல்லது இரண்டாமிடம் பெற்றிருத்தல் வேண்டும்.

மாணவர்கள் 11 முதல் 14 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். (01.11.2002 மற்றும் 31.10.2005க்குள் பிறந்தவராயிருத்தல் வேண்டும்).குறைந்தபட்சம் 5-ம் வகுப்பு தேர்ச்சியும், ஆங்கிலம் மற்றும் இந்தி தெரிந்திருக்க வேண்டும். மேலும் உடலின் எந்த பாகத்திலும் பச்சை குத்தியிருத்தல் கூடாது.

தேர்வு செய்யப்படும் சிறார்களுக்கு இலவச கல்வி, உணவு, தங்குமிடம், விளையாட்டு பயிற்சி இலவசமாக வழங்கப்படும். 10-ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 17½ வயது எய்தியவுடன் இராணுவத்தில் சிப்பாயாக தேர்வு செய்யப்படுவார்.

மேலும் உடல் தகுதி மற்றும் விபரங்களுக்கு **www.armysports institute.com** என்ற இணையதளத்திலும் மற்றும் 020-20265355, 26022928, 26881753 தொலைபேசி எண்களில் அணுகலாம். எனவே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் இவ்வறிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் (பொறுப்பு) மா.சீனிவாசன் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

துணை இயக்குநர் (பொ),
முன்னாள் படைவீரர் நலன்,
கன்னியாகுமரி.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.